Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 28, 2023

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 28, 2023 | ஒளி: 08 கதிர்: 218 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மற்றுமொருவர் ஆபத்தில் உள்ளார்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலை குறித்த திகதியில் நடத்துமாறுகோரி, தேசிய மக்கள் சக்தி கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், பேரணியின் மீது பொலிஸார் நடத்திய கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தில் சிக்கி 29 பேர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### திசைகாட்டியின் பேரணியின் மீதான

# கண்ணீர்புகையில் சிக்கிய வேட்பாளர் மரணம்





தேசிய மக்கள் சக்தியால் கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (27) நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்புகை பிரயோகத்தில் காயமடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மரணமடைந்தார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, நிவித்திகலை பிரதேச சபைக்கு போட்டியிடும் நிமல் அமரசிறி (வயது 61) என்பவரே மரணமடைந்துள்ளார் என்று தேசிய மக்கள் சக்தி கட்சியின் பிரதம செயலாளர் டில்வின் சில்வா அறிவித்துள்ளார். மின் கட்டண அதிகரிப்பு, புதிய வரிக்கொள்கை, தேர்தல் பிற்போடப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை மாபெரும் போராட்டத்தை நடத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ச்சி P2

## 62 பேருக்கும் பிணை

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே உட்பட 62 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கடுவெல நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (27) உத்தரவிட்டது. பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தை திறக்குமாறு கோரி 22ஆம் திகதி பிக்கு மாணவர்கள் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டிருந்த போது, அதனை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## பதவி துறந்தார் மயந்த எம்பி



அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (27) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் எம்.பியான மயந்த திஸாநாயக்க கடந்த 23ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## மின்சார ஊழியர்கள் சுகவீன போராட்டம்

மின்சாரக் கட்டண அதிகரிப்பு, மின்சார ஊழியர்களுக்கான கொடுப்பனவு குறைப்பு, அரசாங்கத்தின் வரிக் கொள்ளை உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து இலங்கை மின்சார சபை ஊழியர்கள்,

தொடர்ச்சி P2

## மத்தும பண்டாரவின் மனு மார்ச் 3இல் பரிசீலனை



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி வழங்காமையால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனுவை மார்ச் 3ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம், திங்கட்கிழமை (27) தீர்மானித்தது. எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

### 24 மணி நேரத்துக்குள் அறிக்கை

## ஆணைக்குழுவால் ஐஜிபிக்கு காலக்கெடு



தேசிய மக்கள் சக்தி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டதில் 28 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் 24 மணித்தியாலங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு (ஐஜிபி) அறிவித்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பு, புதிய வரிக்கொள்கை, தேர்தல் பிற்போடப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியால் கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (27) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### எரிபொருள் ஒதுக்கீடு படிப்படியாகக் கூடும்

#### கியூஆரை இடைநிறுத்த தீர்மானம் இல்லை



கியூஆர் குறியீட்டு முறையின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீடு படிப்படியாக அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, திங்கட்கிழமை (27) தெரிவித்தார். எனினும், ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூஆர் முறைமையை இடைநிறுத்துவது குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் தனது டுவிட்டர் பதிவில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## நான் மக்களுக்கே பகிர்ந்தளிக்கிறேன்

#### குடும்பத்துக்கு அல்ல என்கிறார் சஜித்



எதிர்க்கட்சித் தலைவருக்கு ‘பகிர்ந்தளிக்க மட்டுமே’ தெரியும் என்று நாடு முழுவதும் சிலர் கூறித் திரிகின்றனர் என்றும் சஜித் பிரேமதாஸ நாட்டின் 220 இலட்சம் மக்களுக்காக பகிர்ந்தளிக்கிறாரே தவிர, தனது நண்பர்களுக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ அல்ல என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். மக்களுக்காக எதுவும் செய்யாது, தம்பட்டம் அடிப்பவர்கள் எதையுமே செய்ய நினைப்பதில்லை எனவும் பொய்யான பாசாங்குளைப் பேசி மக்களை ஏமாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

### அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக

## 400 மில்லியன் டொலர் நாணய பரிமாற்று வசதி

உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான, சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபனம், அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்று வசதியை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### ஐக்கிய தேசிய கட்சியை

## பிளவுபடுத்தியவர்கள் பிழைக்க மாட்டார்கள்

#### மாபெரும் அரசியல் கூட்டணியை ஐ.தே.க அமைக்கும்

#### பிரிந்த ஐ.ம.ச சேர்த்து காட்டுமாறு சஜித்துக்கு ரங்கே எம்.பி சவால்



ஐக்கிய தேசிய கட்சியை பிளவுபடுத்தியவர்கள் பிழைக்க மாட்டார்கள் என்று கணித்திருந்ததாகத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, ஐக்கிய தேசிய கட்சி மாபெரும் அரசியல் கூட்டணியை அமைக்கும் என்ற அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் கருத்தை உறுதிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

### 2027ஆம் ஆண்டுக்குள்

## கண்ணிவெடி இல்லாத நாடாக்க திட்டம்



2027ஆம் ஆண்டுக்குள் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான இறுதி மூலோபாய திட்டத்தை தயாரித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இதன்படி, வருடாந்த கையொப்பத்தின் அடிப்படையில் கண்ணிவெடி தேசிய மையத்தின் காலத்தை மேலும் 05 வருடங்கள் நீடிக்கப்பதற்கானஅமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மோதல் சூழ்நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதை வழிநடத்தவும், கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம் நாட்டில் நிறுவப்பட்டது. இந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி 2002 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் தலைமையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச

தொடர்ச்சி P2

### ஷாப்டரின் மரணத்துக்கான

## காரணத்தை கண்டறிய நிபுணர் குழு நியமனம்

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக தடயவியல் நிபுணர்கள் மற்றும் இரு சட்ட வைத்திய அதிகாரிகளைக் கொண்ட ஐவர் அடங்கிய விசாரணைக் குழுவை கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, திங்கட்கிழமை (27) நியமித்தார். தடயவியல் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் பேராசிரியர் டி.சி. ஆர்.பெரேரா, பேராசிரியர் டி.என். பி.பெர்னாண்டோ,

தொடர்ச்சி P2

## தப்பிச்செல்ல உதவிய அதிகாரிக்கு ரூ.1.5 கோடி

ஹங்வெல்ல பள்ளி வீதியில் முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளர் உட்பட 19 பேரை கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட சந்தேகநபர் வெளிநாட்டுக்கு தப்பித்துச் செல்வதற்காக உதவிய கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரியின் வங்கி கணக்குக்கு 1.5 கோடி ரூபாய் பரிமாற்றப்பட்டமை குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கண்ணீர்புகையில் சிக்கிய வேட்பாளர் மரணம்

கொழும்பு கோட்டை மற்றும் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட முக்கியமான கேந்திர ஸ்தானங்களுக்கு ஆர்ப்பாட்ட பேரணி செல்வதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.
அந்த தடையுத்தரவை மீறி, கொழும்பு நகர சபை மண்டபத்துக்கு அருகில், எதிர்ப்பு பேரணி ஆரம்பிக்கப்பட்டு, இப்பாங்வெல சந்தியை சென்றடைந்தது. அவ்விடத்தில் மறித்த பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார், ஆர்ப்பாட்ட பேரணியின் மீது நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டதுடன், கண்ணீர் புகைத்தாக்குதலையும் மேற்கொண்டனர்.
இந்த சம்பவத்தில், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் 28 பேர் காயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு காயமடைந்து அனுமதிக்கப்பட்டிருந்த நிவித்திகல பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் நிமல் அமரசிறியே, சிகிச்சை பலனின்றி நேற்று (27) மதியம் மரணமடைந்தார்.

## மற்றுமொருவர் ஆபத்தில் உள்ளார்

காயமடைந்த அனைவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில், நிவித்திகலை பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் நிமல் அமரசிறி (61) மரணமடைந்தார்.

எஞ்சியுள்ள 28 பேரும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப்பெறுகின்றனர். அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என, கொழும்பில் நேற்று (27) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

## மின்சார ஊழியர்கள் சுகவீன போராட்டம்

திங்கட்கிழமை (27) சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை மின்சார சபை தொழிற்சங்க ஒன்றியம், தொழிநுட்ப பொறியியலாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் சங்கம் உள்ளிட்ட 15 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் தலைமையகத்துக்கு முன்பாகவும் மின்சார சபை ஊழியர்கள் போராட்டம் நடத்தினர். 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்படாத வருடாந்த போனஸ் மற்றும் மருத்துவ கொடுப்பனவுகளையும் தொழிற்சங்கங்கள் கோரி வருவதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்க ஒன்றிய தலைவர் மாலக்க விக்ரமசிங்க தெரிவித்தார். நுகர்வோருக்கு சமநிலை மற்றும் நிவாரணம் வழங்கும் சிறந்த முறையைப் பயன்படுத்தி, கட்டணங்கள் தொடர்பான கணக்கீட்டு முறையை மின்சாரசபை திருத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரிகள் பதிலளிக்கத் தவறினால், தங்கள் தொழிற்சங்க நடவடிக்கை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

## மத்தும பண்டாரவின் மனு மார்ச் 3இல் பரிசீலனை

அதன்போது, குறித்த மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் பரிசீலிக்குமாறு மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய விடுத்த கோரிக்கைக்கு அமைய மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி லியனகே மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளான பெயரிடப்பட்டுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க பிரதிவாதிகள் தவறிவிட்டனர் என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14(1)(அ) பிரிவுகளின் மூலம் மனுதாரருக்கும் இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் மீறுவதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்க வேண்டும் என்று மனுதாரர் கோரியுள்ளார். இதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் திட்டமிட்டபடி மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்துக்கு நகர்தல் பத்திரம் மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காரணத்தை கண்டறிய நிபுணர் குழு நியமனம்

கலாநிதி சிவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ருவன்புர ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கையில் முரண்பாடுகள் இருந்ததால், அதை விரிவாக ஆராய்ந்து செய்து மரணத்துக்கான காரணத்தை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், மேலதிக விசாரணைகள் மார்ச் 14ஆம் திகதி முன்னெடுக்கபடும் என்று உத்தரவிட்டார்.

ஷாப்டரின் மரணம் குறித்து சந்தேக நபர்களோ அல்லது மரணத்துக்கான சரியான காரணமோ இதுவரை நேரடியாகக் கண்டறியப்படவில்லை என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆணைக்குழுவினால் ஐஜிபிக்கு காலக்கெடு

சில வீதிகளுக்குள் நுழைய நீதிமன்றங்கள் தடையுத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் இப்பாங்வெல சந்தியை சென்றடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸாரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதில் காயமடைந்த 28பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் மரணமடைந்ததை அடுத்து, மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை கோரியது .

## நான் மக்களுக்கே பகிர்ந்தளிக்கிறேன்

தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் பஸ்களில் தங்கள் கட்சியின் பெயரையும் சின்னத்தையும் ஸ்டிக்கர்களாக ஒட்டி தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்திக் கொண்டாலும் 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பஸ்ஸையேனும் வழங்க அவர்களால் முடியவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

ஆனாலும், பாடசாலை மாணவர்களுக்கு தான் பஸ் வழங்கும்போது, ‘பஸ் மேன்’ என்று தன்னை விமர்சிப்பதாக தெரிவித்த அவர், எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் மக்களுக்கான சேவை நிறுத்தப்படாது என்றார்.

## 400 மில்லியன் டொலர் நாணய பரிமாற்று வசதி

இதற்கமைய, இலங்கையின் நாணய கையாள்கை மற்றும் ஏற்றுமதியில் 30 சதவீதத்துக்கும் அதிக பங்கை வகிக்கும் மூன்று தனியார் வங்கிகள், மருந்துகள், உணவு மற்றும் பசளை உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக இந்த வசதியைப் பெறவுள்ளன.

இந்த நிதியுதவி, முதலீட்டாளர் சமூகத்தில் நம்பிக்கையை அதிகரிப்பதுடன், இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஆதரவாக புதிய மூலதன வரவுகளை ஈர்க்கும் எனவும் தாம் எதிர்பார்ப்பதாக தெற்காசியாவுக்கான நிதியியல் நிறுவகங்கள் குழுமத்தின், சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபன முகாமையாளர் ஜூன் பார்க் தெரிவித்துள்ளார்.

ஏழு தசாப்தங்களுக்கு மேலாக அதன் மோசமான நிதி நெருக்கடியுடன் போராடி வரும் இலங்கை தற்போது கடுமையான டொலர் நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ள நிலையில், இந்த நிதி இலங்கைக்கு தேவையான அந்நிய செலாவணியை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தரவுகளின்படி, இலங்கையின் பொருளாதாரம் 2022இல் 9.2 சதவீதமாக ஆக சுருங்கும் என்றும் 2023 இல் மேலும் 4.2 சதவீதம் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கண்ணிவெடி...

சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், 2013இலல், ஐ.நா அபிவிருத்தி நிதியம் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இருந்து பின்வாங்கியது.

வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் 04 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இந்த நிலையத்திற்காக செயற்பட்டு வருகின்றன.

இந்த அரசு சாரா நிறுவனங்களில் 3000க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். சர்வதேச உதவி நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் செயல்முறைக்கு ஆதரவை வழங்குகின்றன. கடந்த வருடம் இதற்கென 14.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அது 17 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்ட உலக கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தின்படி, 2028ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் இல்லாத நாடாக இலங்கை மாற வேண்டும். அது தொடர்பாக, 2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நபர் எதிர்ப்பு கண்ணிவெடி தடைச் சட்டத்தையும் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

2010 ஆம் ஆண்டு தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம் நிறுவப்பட்ட போது, 2020 ஆம் ஆண்டளவில் அந்த அபாயத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை அகற்ற திட்டமிடப்பட்டது, ஆனால் அப்போது அடையாளம் காணப்படாத ஏராளமான கண்ணிவெடிகள் உள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டது.

2012-2017 மற்றும் 2022 இல் நிரந்தரமாக ஆபத்தான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டது. இது ஆய்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்டது. இதன்படி வடக்கு கிழக்கு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக 15 சதுர கிலோமீற்றர் நிலம் எஞ்சியுள்ளது.

இது தவிர, அங்கீகரிக்கப்படாத 02 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் நிரந்தர ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெனிவாவில் உள்ள சர்வதேச கண்ணிவெடி நடவடிக்கை மையமும் இத்திட்டத்தின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது.

## 62 பேருக்கும் பிணை

பொலிஸாரின் நடவடிக்கைகக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிட்டிபன பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் பிக்கு மாணவர்கள் சிலரும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சேர்ந்த சிலரும் கல்வி அமைச்சின் வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்தனர்.

கடந்த வெள்ளியன்று (23) இடம்பற்ற இந்த எதிர்ப்பில் ஈடுபட்ட முதலிகே உள்ளிட்ட 62 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

## பதவி துறந்தார்...

அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சக்தியின் ஹர்ஷ எம்.பிக்கு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சபாநாயகரிடம் கடந்த 21ஆம் திகதி வலியுறுத்தினார்.

எனினும், ஆளும் கட்சியின் ஆதரவுடன் அப்பதவிக்கு மயந்த திஸாநாயக்க தெரிவாகியிருந்த நிலையில், மயந்த திஸாநாயக்க பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலேயே அவர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

## எரிபொருள்...

அடுத்த சில மாதங்களில் நிதி அமைச்சு மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து இந்த குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கியூஆ முறைமையை ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாப வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியிருந்தது.

அந்த செய்தியை மறுத்து டுவிட்டரில் பதிவிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயங்களை அமைச்சர் சுட்டிக்காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கியூஆர் முறையானது மூன்று அல்லது நான்கு மாதங்களில் இரத்து செய்யப்படும் என்றும், சாதாரண நிலைமைகளின் கீழ் நாட்டுக்கு தொடர்ந்து எரிபொருளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தப்பிச்செல்லஉதவிய அதிகாரிக்கு ரூ.1.5 கோடி

ஹங்வெல்ல முஸ்லிம் வர்த்தகரை சுட்டுக்கொன்ற வழக்கில் அடையாளம் காணப்பட்ட சந்தேகநபருக்கு அவிசாவளை நீதிமன்றத்தால் வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தேரர்கள் இருவர் உட்பட காரின் சாரதியும் கைது ஹெட்டிப்பொலவில் கைது செய்யப்பட்டுள்ளனர். காரும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## பிளவுபடுத்தியவர்கள் பிழைக்க மாட்டார்கள்

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி பல அணிகளாக பிளவுபட்டுள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக கூறிய அவர், ராஜித குழு, பொன்சேகா குழு மற்றும் சமீபத்தில் மயந்த குழு என பிளவுபட்டுள்ளதாகவும் முடிந்தால் இந்த குழுக்களை ஒன்றிணைத்து காட்டுமாறு சஜித் பிரேமதாஸவுக்கு சவால் விடுவதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் கூட்டணியில் இணையவுள்ளதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ அண்மையில் பதுளையில் தெரிவித்திருந்தார்.

ஹரீனின் கருத்தை ரங்கே எம்.பி உறுதிப்படுத்தினார்.

அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகுமாறு, அக்கட்சியின் எம்.பியான மயந்த திஸாநாயக்கவுக்கு மற்றுமொரு சிரேஷ்ட எம்.பி ஊடாக கட்சித் தலைமை அழுத்தம் கொடுத்துள்ளதாக ரங்கே பண்டார இதன்போது சுட்டிக்காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஆசை துறந்தவருக்கு அத்திபாரம்


நா.சாருமதி
(ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

2009 ஆம் ஆண்டு யுத்த முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மதத்தின் பேரிலும் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் ஊடாகவும் அதிகளவு நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. தமிழரின் பாரம்பரியம், பூர்வீகம் என போற்றப்படும் பல இடங்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவை தமிழ் பூர்வீகர்களின் நினைவுவழிவந்த அடையாளச் சின்னங்களாகும்.

இலங்கையை பொறுத்தமட்டில் நில ஆக்கிரமிப்பு என்பது எழுதப்படாத விதி ஆகும். கடந்த சில ஆண்டுகளாக நில ஆக்கிரமிப்பு தொடர்பான கருத்துகள் உலகளாவிய ரீதியில் அதிகளவு மக்கள் மத்தியில் பேசுபொருளாக காணப்பட்டது. இனத்தின் அடையாளங்களை ஆக்கிரமிப்பதற்கு எதிராக மக்கள் பல போராட்டங்களை மேற்கொண்டாலும் குடியேற்றங்கள், விஹாரை அமைப்பு, பயிர்ச்செய்கை நடவடிக்கை என பல நோக்கங்களில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுத்தான் வருகின்றன.

அண்மையில் நிலாவரைக் கிணறு அருகே புத்தர்சிலை வைக்கப்பட்ட செய்தி ஒன்றை அவதானித்தபோது கடந்த காலத்தில் கூட அதிகம் பேசப்பட்ட நில ஆக்கிரமிப்புகளாக வவுனியா வடக்கில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர், முல்லைத்தீவு தெற்கில் குருந்தூர் மலை ஐயன் இன்னும் பேசப்படாத பல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றே வருகின்றன. இவற்றின் வரலாற்றையும் தற்போதைய நிலைப்பாட்டையும் பேசுவது காலத்தின் தேவையாகும்.






**நிலாவரைக் கிணறு அருகே புத்தர்சிலை வைக்கப்பட்டதை அவதானித்தபோது, நில ஆக்கிரமிப்புகளாக வெடுக்குநாறி, குருந்தூர் உட்பட இன்னும் பேசப்படாத பல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றே வருகின்றன**


யாழ்ப்பாணத்தின் வடக்கே 16 கிலோ மீற்றர் தொலைவில் அச்சுவேலி நோக்கி செல்லும் வீதியில் புத்தூர்- சுன்னாகம் நெடுஞ்சாலை இரண்டும் சந்திக்கும் முச்சந்தியில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நவகிரி பகுதியில் வற்றாத இயற்கை உற்றாக நிலாவரை கிணறு அமைந்துள்ளது.

இது வரலாற்று சிறப்புமிக்க தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்வதோடு ஆரம்பத்தில் நிலவரை என மலை எனும் பொருளில் அமைந்து பின்பு நிலாவரையாக மக்களால் பேசப்பட்டது. யாழ்குடா நாடு புவிச்சரிதவியல் ஆய்வுகளில் ஒரு முக்கிய தரைக்கீழ் சுண்ணாம்புக்கல் பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ள பகுதியாகும். தற்போது 52 அடி நீளம் 37 அடி அகலம் கொண்ட நீள் சதுர வடிவில் அமைந்துள்ள நிலாவரை நில மட்டத்திலிருந்து 14 அடி ஆழத்தில் நீர் காணப்படுகின்றது.

இந்த நீர்நிலை தொடர்பில் பல்வேறுபட்ட நாடுகளில் இருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் பல மர்மங்கள் கொண்ட பகுதியாகவும் இது காணப்படுகின்றது. 2016 குடா நாட்டின் வெப்பநிலை 35 பாகை செல்சியஸ் ஆக காட்டிய போதும் இக்கிணற்றின் ஆழப்பகுதியின் வெப்பநிலை 26 பாகை செல்சியஸ் ஆக பதிவாகி இருந்தது. இப்படி பல ரகசியம் கொண்ட நிலாவரை கிணற்றின் ஆழத்தை கணிக்க முற்பட்டபோது 182 அடி அதாவது 2 பனை மரங்களின் அளவிற்கு கணக்கிடப்பட்டது.

நிலா வரைக்கும் கடலுக்கும் தரைக்கீழ் தொடர்பு உண்டு என கருதப்படுவதோடு குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டு தரைத்தோற்ற அமைப்பே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது. தற்போது தேசிய நீர் வழங்கல் வடிக்கால் அமைப்பு சபையினரால் பராமரிக்கப்படுவதுடன் இப்பகுதி தொல்லியல் ஆராய்ச்சி திணைக்களத்துக்குரிய பகுதியாகவும் இருப்பதுடன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டும் வருவதுடன் நிலாவரை கிணற்றிலிருந்து நீர் வழங்கும் பணிகள் வாதராவத்தை குடிநீர் விநியோகத் திட்டம் எனும் பெயரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பல மர்மங்களையும் வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட மரபுச் சொத்தாக விளங்கும் நிலாவரைப் கிணறு சுற்றுலா பயணிகள் விரும்பும் ஓர் இடமாக காணப்படுவதோடு அதற்கு அண்மித்த பகுதி தொல்லியல் திணைக்களத்தினரால் உரிமைகோரப்படுவதோடு குறித்த பகுதியைச் சுற்றி இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுவரும் நிலையில் தற்போது குறித்த பகுதியில் புத்தர் சிலை வைத்திருந்தமை என்பது தமிழர்களின் வரலாற்று மரபுரிமைகளை பௌத்தமயமாக்கும் இன்னொரு முயற்சியின் அத்திபாரம் இருக்குமோ என சிந்திக்கத் தூண்டுகின்றது. எது எவ்வாறு இருப்பினும் 'புத்தர் ஆசை துறந்த துறவி' என்பதை அனைவரும் சிந்தித்தால் நன்று.



# மாற்றங்களே அவசியம்

இராஜேந்திரன் தனுஷியா
( நான்காம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்)

'கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பாடசாலை சீருடை அணிந்து சைக்கிளில் உற்சாகத்துடன் பயணித்துக்கொண்டிருந்த போது, திடீரென என்னில் ஏதோ துளிகள் விழுவதை உணர முடிந்தது. அதை என்னவென்று ஆராய்வதற்குள் சீருடையில் இரத்தக்கறை போன்றதொரு படியல் விழுந்தது. நிமிர்ந்து பார்த்தால் முன்னால் சென்று கொண்டிருந்த ஓட்டோவிலிருந்து ஒரு தலை உள்ளே சென்றது.

ஓட்டோ நிறுத்தவும் இல்லை; சைக்கிளில் இருந்து இறங்கி என் சீருடையை பார்க்க எனக்கே அருவருப்பானதாக இருந்தது, அப்படியே சைக்கிளை திருப்பி வீட்டை வந்தடைந்தேன். அன்றைய நாள் முழுவதுமே அந்த அருவருப்பின் தாக்கமும் கோபமும் இருந்து கொண்டே இருந்தது'. இது சாதாரணதரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவியொருவரின் மனக்குமுறலாக இருந்தது.

'பயணம் இல்லாத வாழ்க்கை மயானத்திற்கு கூட செல்லாது' என்பார்கள். ஆம்! ஒவ்வொருவரும் பயணத்திலேயே நம் நாள்களை ஆரம்பிக்கின்றோம். பயணம் எளிதாகிவிட்ட தற்காலத்திலும் கூட வீதியில் செல்வதற்கு தயங்கும் பல வகைப்பட்டோரை காணலாம். 1 கிலோ மீற்றர் தூர பயணமோ 10 கிலோ மீற்றர் தூர பயணமோ, வீதிகளில் இவற்றை உணராதோர் தெரிந்தும், தெரியாமலும் என எளிதாக கூறி விட முடியாது.

ஏனெனில் தெரிந்தே, தம்மை உணர்ந்தே வீதிகளில் எச்சில்களையும், வெற்றிலை பாக்குகளை உமிழ்ந்து அதன் துளிகளையும் வீதியிலேயே துப்புகிறார்கள். நடந்து செல்பவர்கள் எனத்தொடங்கி சிறிய வாகனம் முதல் பாரிய வாகனம் வரை செலுத்துபவர்களும் இன்னொருபுறம் அவற்றில் பயணம் செய்பவர்களும் உதாரணமாக பஸ்ஸில் பயணித்துக்கொண்டும், மோட்டார் சைக்கிளை செலுத்திக்கொண்டும் பின்னால் வரும் வாகனங்களையோ அல்லது மனிதர்களையோ அசட்டை செய்யாமல் தமக்கு மட்டுமே வீதிகள் என நினைத்து தம் எச்சிலை வீதிகளில் துப்புகிறார்கள்.

எச்சில் துப்புவது என்பது அருவருப்பான செயல் என்பதோடு அநாகரிகமான செயலுமாகும். பொதுவாக வளர்ச்சியடைந்த பல நாடுகளில் பொது இடங்களில் எச்சில் துப்பும் பழக்கம் மிகக் குறைவு, ஆனால் இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் வீதிகளில், பொது இடங்களில் எச்சில் துப்புகின்றவர்கள் ஏராளம். சில நாடுகளில், பொது இடங்களில் எச்சில் துப்புவது பெரும் தண்டணைக்குரிய குற்றமாகும்.

**அநாகரிகமான எச்சில் துப்பும் பழக்கத்தை மாற்ற, சிறு வயதிலிருந்தே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்**

**நம் நாட்டில் இயற்றப்படும் அநேகமான சட்டங்கள், காற்றில் எழுதிய வெற்று வாசகங்களாகவே இருக்கின்றன**

அபராதங்களில் தொடங்கி சிறைத்தண்டனைகள் வரை எச்சில் துப்புகிறவர்களுக்கு வழங்கப்படுகின்றது. சிங்கப்பூரில் எச்சில் துப்புவது குறித்து கடுமையான விதிகள் உள்ளன, ஸ்பெயினில் உள்ள சில சாலைகளில் எச்சில் துப்பினால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

யாழ். மாநகரப் பகுதிகளுக்குள் வெற்றிலை உமிழ்ந்து எச்சிலைத்துப்பினால் 2,100 ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதாக யாழ். மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் 2021.04.07ஆம் திகதிகளிலில் அறிவித்திருந்த போதிலும் இன்று வரையிலும் அதன் அமலாக்கல் நிலை எங்கே என்பது தான் கேள்விக்குரிய விடயமாகிறது.

கொரோனா காலங்களில் இவ்வாறான செய்கை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் தற்போது அந்த நடைமுறை பேணப்படாத நிலையே காணப்படுகின்றது. கொரோனா தொற்று நோய் சமயங்களில் மக்களும் சரி, அரசும் சரி இது தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார்கள். கொரோனா மட்டுமல்ல காசநோயில் தொடங்கி பல்வேறு நோய்கள் பரவுவதற்கு வீதிகள் மற்றும் பொது இடங்களில் எச்சில் துப்பும் பழக்கமே மூலகாரணமாய் அமைகின்றது. நம் நாட்டில் அரசாலோ அல்லது அரச அதிகாரிகளாலோ இயற்றப்படும் அநேகமான சட்டங்கள் காற்றில் எழுதிய வெற்று வாசகங்களாகவே இருக்கின்றன.

நம் பயணத்தில் ஒரு முறையாவது துப்பிய எச்சில் நம்மீது பட்டிருப்பதை அனுபவித்திருப்போம். காலையில் எழுந்து எம்மை தயார்படுத்தி புத்துணர்வோடு நமக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பயணத்தை ஆரம்பித்து விடுவோம். அத்தருணங்களில் இவ்வாறான எச்சில்கள் எம்மீது படும்போது ஏற்படும் மனநிலை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.


நீண்ட தூரப்பயணங்களை மேற்கொள்ளும் போது இவ்வாறான செயல்களின் தாக்கங்களால் செய்வதறியாது திகைத்தவர்கள் பலர். பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடக்கம், தொழிலுக்காக செல்வோர், நற்காரியங்களுக்கு செல்வோர் என பலரது பயணத்திலும் இவ்வாறானதொரு செயலை அனுபவித்திருப்பார்கள்; அல்லது, எதிரே ஏனையவர்களுக்கு நடக்கும் போது பார்த்தாவது இருப்பார்கள்.

நம் நாட்டில் மாற்ற முடியாத பழக்கவழக்கங்களில் இதுவும் ஒன்று. சந்ததி, சந்ததியாய் கடத்தப்பட்டு வரும் பழக்கமாகவும் அமைகிறது. ஆரம்பகால எத்தனையோ நற்பழக்கவழக்கங்களை இன்று கடைப்பிடிக்கத்தவறிய நாம், இவ்வாறான அருவருக்கத்தக்க செயலை தொடர்ந்தேர்ச்சியாக கடைப்பிடித்து வருகின்றோம். ஆரம்பகால உணவுப்பழக்கம் தொடங்கி எம் நடை, உடை, பாவனை, மொழி என ஒட்டு மொத்த மனித நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்கின்ற நம்மால் ஏன் இன்னமும், இந்த அநாகரிகமான எச்சில் துப்பும் பழக்கத்தை மாற்றிக்கொள்ள இயலாமலிருக்கிறது என்ற கேள்வி ஏற்பட்டும் கூட விடை காண முடியவில்லை.

இவை தொடர்பில் அனைவருக்கும் சிறு வயதிலிருந்தே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இனிவரும் சந்ததியிலாவது இவ்வாறான செயல்கள் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எச்சில் மற்றும் வெற்றிலை பாக்குகளை குதப்பி துப்புவதற்கும், அச்செயல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்குமான காரணங்கள் எவையென நோக்கினால், ஒவ்வொருவரும் பல காரணங்களை முன்வைக்க முடியும்.

முதலில் ஒவ்வொரு நபர்களும் இவ்வாறு எச்சிலை வீதிகளிலும், பொது இடங்களிலும் அநாகரிகமாக துப்புவதை நிறுத்த வேண்டும். மற்றும், அரசு கடுமையான சட்டங்களை அமல்படுத்த வேண்டும். வெறுமனே அபராதங்கள் மட்டும் கொண்டு இவ்வாறான செயல்களை கட்டுக்குள் கொண்டு வர முடியாது.

சட்டங்களை அமல்படுத்தினால் மட்டும் இவ்வாறான செயல்களை கட்டுக்குள் கொண்டு வர முடியுமா என்றால் கேள்விக்குரிய விடயமே! அமல்படுத்தப்பட்ட சட்டங்கள் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும். இவ்வாறான தொடர்ச்சியான கண்காணிப்புகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், கடுமையான மற்றும் இறுக்கமான சட்டங்கள், தனிநபர் ஒவ்வொருவரிடத்திலும் மாற்றங்கள் ஏற்படுதல் ஆகியவை ஓரளவேனும் நாம் எச்சிலை எமது பயணத்தின் போது அனுபவிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கையாக அமையும்.





மயிலத்தமடு, மாதவனை

# மாடுகள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளன

## நீதிமன்ற உத்தரவை மீறி அத்துமீறிய காணி அபகரிப்புகள்

வ. சக்தி, வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டம், மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதியில் அமைந்துள்ள மேச்சல்தரைப் பகுதியில், தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாகத் தமது கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இந்நிலையில், குறித்த மேச்சல்தரைப் பகுதியை, பகுதி பகுதியாகப் பிரித்து, 'மகாவலி' அபிவிருத்தி எனக்கூறி, சிங்கள மக்களைக் குடியேற்றி சேனைப் பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும், சேனைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்ட வண்ணமாக உள்ளது.

வெள்ளிக்கிழமை (24), கால்நடைகள் சேனைப் பயிர் செய்கைக்குள் புகுந்ததாகத் தெரிவித்து, பெரும்பான்மை இனத்தவர்கள் கால்நடைகள் மீது துப்பாக்கியால் சுட்டு, கூரிய ஆயுதங்களாலும் தாக்கியுள்ளதால், துப்பாக்கி சூடுபட்டு மாடு ஒன்று உயிரிழந்துள்ளது. என கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கட்டுத்துப்பாக்கியை வைத்துக் கொண்டு, எமது மேச்சல்தரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ள சிங்கள மக்களே, எமது கால்நடைகள் மீது துப்பாக்கியால் சுட்டும், கூரிய ஆயுதங்களால் தாக்கியும் வருகின்றார்கள். எம்மீதும் துப்பாக்கியால் சுடுவார்கள் என அச்சமாகவுள்ளது. இப்பகுதியில் வாழ்வதற்கு, மிகுந்த உயிர் அச்சுறுத்தலாக உள்ளது என கால்நடை வளர்ப்பாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக, கோவிந்தன் கருணாகரம் எம்.பி, இரா. துரைரெட்ணம், புளொட்டின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ். கேசவன் உட்பட பலர் கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கருணாகரம் எம்.பி, "நீதிமன்ற உத்தரவையும் மீறிய வகையில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்படுகிறன. இங்கு ஒரு மாடு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐந்து மாடுகள் வெட்டி கொலைசெய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஒருவர் கரடியனாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டபோதிலும் முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. தமிழர்களின் பொருளாதாரத்தை அழிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகிறது எனவும் கருணாகரம் எம்.பி குற்றஞ்சாட்டினார்.

வட மாகாண மீனவர்களின் பிரச்சினைகளுக்கு

# ஆக்கபூர்வமான தீர்வுகள் வேண்டும்

## சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை

எஸ். றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டம் உட்பட வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, மீனவ அமைப்புகளுடன் அரசாங்கம் கலந்துரையாடி, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாறாக, மீனவர்களின் வாழ்வியலை சீர்குலைக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லக்கூடாது என மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து, நேற்று (27) மன்னாரில் ஊடக சந்திப்பு ஒன்றை மேற் கொண்டனர். இந்த ஊடக சந்திப்பில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இணைப்பாளர் தயாளன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ. பெனடிற் குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம் ஆலம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளைத் தெரிவித்தனர்.

இதன் போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் மன்னார் மண்ணையும் மன்னாரில் உள்ள வளத்தையும் சுரண்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில், மக்களின் வாழ்வாதாரத்தையும் மக்களின் எதிர்காலத்தையும் அழிக்கின்ற போக்கே காணப்படுகிறன. காற்றாலை என்ற பெயரில், மன்னாரின் தீவுப்பகுதியில் பல அழிவுகரமான செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

முக்கியமாக, மன்னாரில் வாழ்வாதாரத்துக்காக மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு காற்றாலை பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனவே காற்றாலை திட்டத்தை, வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மன்னார் தீவு பகுதியில் இல்லாமல், மக்கள் பயன்படுத்தாத பல இடங்கள் அருகில் இருக்கின்றன. அந்த இடங்களில் காற்றாலைகளை அமைக்கின்ற போது, மீனவர்களின் பிரச்சினைகளும் வாழ்வியல் பிரச்சினைகளும் இல்லாமல் போகும்.

நாங்கள் அபிவிருத்திக்கு தடையானவர்கள் இல்லை. எனினும், மக்களின் வாழ்வியல், உரிமை, தொழில் பாதிக்கப்படும் வகையில் உள்ள இந்தக் காற்றாலைத் திட்டத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். எனவே அரசாங்கம், மீனவர்களின் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.



# இளம் வேட்பாளர்களுக்கு அறிவூட்டல் செயலமர்வு

வி. சுகிர்தகுமார்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் இளம் வேட்பாளர்களை அறிவூட்டல் மற்றும் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளை தெளிவூட்டல் செயலமர்வு, அக்கரைப்பற்று தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது.

பஃவ்ரல், எம்எஸ்ஜ ஐடியா ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இச்செயலமர்வில், அம்பாறை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ், முஸ்லிம் கட்சிகள், சுயேட்சை குழுக்களின் ஊடாக போட்டியிடும் இளம் அபேட்சகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ,உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் வகிபாகம், அதன் தொழிற்பாடுகள், ஜனநாயக ஒழுக்க விழுமியங்கள், தேர்தல் பிரசார செலவு, தவறான தேர்தல் செயற்பாட்டால் எதிர்கொள்ள வேண்டியச சட்ட சிக்கல்கள் உள்ளிட்ட தலைப்புகளில் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையத்தின் தவிசாளரும் பஃவ்ரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளருமான வி. பரமசிங்கத்தின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பஃவ்ரல் அமைப்பின் வளவாளர்களாக ஆ. சொர்ணலிங்கம், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி செல்வராஜா துஷ்யந்தன், கலந்து கொண்டு விரிவுரைகள் மூலமாக விளக்கமளித்தனர்.







# 'புல் ஏந்தா பனித்துளிகள்'

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கவிதாயினி மேகா மிர்சா எழுதிய 'புல் ஏந்தா பனித்துளிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (26) அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம் அறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம் முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச் அப்துல் றஹீம், அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், பொத்துவில் மக்கள் வங்கி கிளையின் வியாபார திட்ட முகாமையாளர் எம்.ஐ.எம் நபில், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாநிதி ரியாத் ஏ. மஜித் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நூல் ஆய்வை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும் நூல் அறிமுகத்தை பன்னூலாசிரியர் எஸ்.எல் மன்சூரும் நூல் நயத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜுல்பிகா ஷெரிப்பும் நிகழ்த்தினர்.

அபு அலா



# மன்னாரில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

எஸ். றொசேரியன் லெம்பேட்

தலைமன்னார் பிரதான வீதியின் ஆடை தொழிற்சாலைக்குப் பின்பகுதியில் உள்ள களப்பு பிரதேசத்தில் நேற்று (27) காலை, 41 கிலோ 620 கிராம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பதில் கடமை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத்விதானகேவின் பணிப்பில், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொ.ப ரத்நாயக, பொ.சா ரத்னமணல தலைமையிலான அணியினரே, கேரள கஞ்சாவைக் கைப்பற்றி, சந்தேக நபரையும் கைது செய்தனர். சந்தேகநபர் கருங்கண்டல், வண்ணாங்குளம் பகுதியை சேர்ந்த 25 வயதுடையவராவார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் புகுந்த

# வன்முறை கும்பல்

## காவலாளி மீது வாள் வெட்டு முயற்சி



எம். றொசாந்த்

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல், காவலாளி மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்த முயன்றுள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. குறித்த சம்பவம், ஞாயிற்றுக்கிழமை (26) இரவு இடம்பெற்றிருக்கின்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; பட்டா ரக வாகனத்தில் வந்த கும்பல், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறை பக்கம் உள்ள நுழைவாயில் கதவால் ஏறிக் குதித்து, வைத்தியசாலைக்குள் நுழைய முயன்றுள்ளனர்.

இதை அவதானித்த வைத்தியசாலை காவலாளி, அவர்களைத் தடுக்க முயன்றபோது, காவலாளி மீது தாக்குதல் நடத்த முயன்றதுடன், அவர்கள் வந்த பட்டா வாகனத்திலிருந்து வாளை எடுத்து காவலாளியை வெட்ட முயன்றுள்ளனர்.

இதையடுத்து சுதாகரித்துக் கொண்ட காவலாளி, அவர்களை தடுக்க முயன்ற நிலையில், அங்கிருந்த கதிரை, மேசை போன்றவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்திய வன்முறை கும்பல், பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக, யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முற்பணத்தை செலுத்தினால்தான்

# வர்த்தக கண்காட்சிக்கு அனுமதி

## யாழ். மாநகர சபை தீர்மானம்

எம். றொசாந்த்

யாழ். மாநகர சபைக்கு விற்பனை மேம்படுத்த வரியின் முற்பணத்தைச் செலுத்தினால் மாத்திரமே, யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது என யாழ்.மாநகர சபை நிதி குழு தீர்மானித்துள்ளது.

யாழ். மாநகர சபையின் நிதிக்குழு, நேற்று (27) கூடி, யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட வரிச் சலுகைக் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்தது.

அதன்போது, காட்சிப்படுத்தவுள்ள வர்த்தகர்களிடம் முழுமையான கட்டணங்களை அறவிட்டுள்ள ஏற்பாட்டாளர்கள், மாநகர சபையால் கோரப்பட்டுள்ள வரி முற்பணத்தைச் செலுத்தாவிடின், நிகழ்வுக்கான அனுமதியை வழங்குவதில்லை. அத்துடன் நலச் சேவைகளையும் வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உலகத் தமிழர் விருது

வி.ரி சகாதேவராஜா

தேசிய ரீதியில் கலைத்துறையில் சாதனை புரிந்து வரும் கலைஞர்களை கௌரவிக்கும் உலகத் தமிழர் விருது விழா, நான்காவது முறையாக மன்னார், பேசாலை சங்கவி திரையரங்கு மண்டபத்தில் சனிக்கிழமை (25) நடைபெற்றபோது, அம்பாறை மாவட்டத்தில் இருந்து நடனத்துறை கலைஞர்களாகிய ஜெ. தக்சாளினி, லோ. சத்யாழினி, நா. விதுஷியா, பா. விமிலியா, கி. அக்ஷலா, த. அனுலக்சியா ஆகியோருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



அக்கராயன் – வன்னேரிக்குளம் வீதியில் யானைகள்

# பாதுகாப்பாக பயணிக்கவும்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, அக்கராயன் - வன்னேரிக்குளம் வீதியில் யானைகளின் நடமாட்டத்தால் பொது மக்களின் போக்குவரத்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது.

மாலை 6.00 மணியளவில் 09ஆம் கட்டைப் பகுதியில் வீதிக்கு அருகில் வரும் யானைகள், வீதியில் நீண்ட நேரம் தரித்து நிற்பதால், போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் தொடர்ந்து பயணிக்க முடியாமல், வீதியில் காத்து நிற்க வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது. நீண்ட நாள்களுக்கு பின்னர், குறித்த வீதிப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



கிளிநொச்சி மாவட்டத்தின் யானைகளின் தொல்லை அதிகரித்த கிராமங்களில் ஒன்றாக, வன்னேரிக்குளம் கிராமம் காணப்படுகின்றது. இக்கிராமத்தில் நெல் அறுவடை நிறைவடைந்து வரும் நிலையில், வயலுக்கு வந்த யானைகள், தற்போது கிராமத்துக்குள் நுழைந்து பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

யானைகளின் நடமாட்டத்தால் வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், திக்காய்க்குளம் ஆகியவற்றின் அணைக்கட்டுகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்து வருவதாக வன்னேரிக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் - வன்னேரிக்குளம் வீதியில் 09ஆம் கட்டைப் பகுதியில் யானைகள் வீதியைக் கடப்பதால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள்ஈம, பாதுகாப்பாக பயணிக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் அறிவித்துள்ளன.

# வேட்பாளர்களை வீழ்த்தும் செயல்

ரஞ்சித் ராஜபக்ஷ

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்து அதற்கான வேட்புமனுவும் தாக்கல் செய்து, வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில், தேர்தல் நடக்காது என அறிவிப்பதானது வேட்பாளர்களை பொருளாதார ரீதியில் வீழ்த்தும் செயலென தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பிரதேச சபைக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களுடன் கொட்டகலையில் இடம்பெற்ற



சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல் நடத்தப்படும் திகதியை அரசாங்கத்துடன் கலந்துரையாடிய பின்பே அறிவித்ததாகத் தெரிவித்தார். அதற்கமைய தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்பட்டதும் தேர்தலுக்கு பயந்த அரசாங்கம், தேர்தலை நடத்த பணம் இல்லையென அறிவிக்கின்றது.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றால் அரசாங்கம் பலத்த தோல்வியடையும். தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வெற்றியடையும் எனத் தெரிந்து கொண்டே அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இருக்க தீர்மானித்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து, தேர்தலை பிற்போட நடவடிக்கை எடுத்து விட்டு, ஊடகங்களுக்கு முன்பாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தெரிவிப்பது நகைப்புக்குரிய விடயம் என்றார்.

# ‘மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல்’

எஸ்.கே. குமார்



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்கள் மற்றும் செயலூக்கமுள்ள பெண் தலைமைகளுக்கான ‘மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல்’ தொடர்பான ஒரு நாள் செயலமர்வு நேற்று (27) கொட்டகலையில் காலை 09.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற்றது.

இங்கு உள்ளூராட்சி மன்றத்தில் பெண்களின் தேவை, முக்கியத்துவம், மக்கள் பிரதிநிதிகளாக ஆற்ற வேண்டிய பொறுப்புகள், கடமைகள் அத்துடன் சமூகத்தின் இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் மூலம் நிறைவேற்றுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறப்புரிமைகள், உள்ளூராட்சி அமைப்புகளின் அரசியலமைப்புகள் மற்றும் ஒழுங்கு முறைகளை முழுவதுமாக புரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவை, நுவரெலியா மாவட்ட சர்வமதக் குழுவுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன், வெகுஜன ஊடகம், சுற்றாடல், சிறு ஏற்றுமதி, மொழி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய அமைச்சுகளில் செயலாளராகப் பணியாற்றிய நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பெண் கவுன்சிலர்கள், எதிர்வரும் உள்ளூராட்சி சபைக்கு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்பட சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 50 பெண்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

### தீயிலிருந்து மயிரிழையில் தப்பிய

# கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையம்

எம்.பிரபா



தேசிய பண்ணை அபிவிருத்தி சபையின் கொட்டகலை ரொசிட்டா பண்ணையில் ஏற்பட்ட தீயின் காரணமாக பல ஏக்கர் புற்றரை தீயால் எரிந்துள்ளது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் காணப்படும் இந்தப் புற்றரையில் நேற்றுமுன்தினம் (26) பிற்பகல் ஏற்பட்ட தீயின் காரணமாக, இந்தப் பிரதேசம் முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதன்போது இந்தப் பண்ணைக்கு அருகிலுள்ள கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையம் வரை, தீ பரவியதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் சுமார் ஒரு மணித்தியாலம் நிறுத்தப்பட்டதுடன் இந்நிலையத்தின் ஊழியர்களின் பெரும் முயற்சியின் காரணமாக இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் தீயில் இருந்து காப்பாற்றப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள், நிலையத்தில் காணப்பட்ட நீரை பயன்படுத்தி எரிபொருள் நிலையம் வரை பரவிய தீயை பெரும் போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததனர். எனினும், இந்தத் தீ தொடர்ந்து மறுபுறம் பண்ணையின் புற்றரை வழியாக தொடர்ந்து பரவியது.

பின்னர் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வழமைக்கு திரும்பின.

# நீராட சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

டி சந்ரு



நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெஸ்போட் பிரதேசத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு செல்லும் ஆற்றில் நீராடச் சென்ற இளைஞன், சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் (26) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டெஸ்போட் மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மகேந்திரன் சதிஸ்குமார் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்த போதே இவர், நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நானுஓயாவில் கிலாரண்டன் பகுதியில் தனது உறவினர் வீட்டில் ஐந்து நாள்களாக தங்கி இருந்த இவர், நண்பர்களுடன் நீராட சென்றுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸார், பிரதேச மக்கள் மற்றும் சுழியோடிகளின் உதவியுடன் இளைஞனின் சடலத்தை கரைக்கு கொண்டுவந்ததுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹட்டனில் மரவள்ளிக்கிழங்கின் விலை 200 ரூபாயாக அதிகரித்தது

ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டனில் ஒரு கிலோ கிராம் மரவள்ளிக்கிழங்கின் சில்லறை விலை 200 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, ஹட்டன் பிரதேசத்தில் மரக்கறி சில்லறை விற்பனை நிலையங்கள் சிலவற்றில் மாத்திரமே மரவள்ளிக்கிழங்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அவ்வாறு விற்பனை செய்யப்படும் கிழங்கு, பலாங்கொட பகுதியிலிருந்து கொண்டு வரப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் மரவள்ளிக்கிழங்கு 50 ரூபாய் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கும் வியாபாரிகள், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் உள்ளூர் சந்தைகளின் கேள்விகளுக்கு ஏற்ற விநியோகம் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மரவள்ளிக்கிழங்குக்கான கேள்வி அதிகரிப்பே தற்போது விலை அதிகரிப்புக்கான காரணம் என்றும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இதற்கு முன்னர் கம்பஹா பகுதியிலிருந்து ஹட்டனுக்கு மரவள்ளிக்கிழங்கு மொத்தமாக கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டதுடன், தற்போது கம்பஹாவிலிருந்து கொண்டு வரப்படும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளமையும் ஹட்டனில் மரவள்ளிக்கிழங்கு விலை அதிகரிப்புக்கு மற்றுமொரு காரணம் என்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



### களுபான தோட்ட மக்களுக்கு

# சவர்க்கார உற்பத்தி செயலமர்வு

என்.ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய, களுபானை தோட்ட மக்களுக்கு சவர்க்காரம் உற்பத்தி தொடர்பான ஒருநாள் செயலமர்வு நடைபெற்றது.

களுபான தோட்டத்தின் சிறுவர் காப்பகத்தில் இந்தச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

புளத்கொஹூபிட்டிய விதாதா வள நிலையத்தின் சிரேஸ்ட அதிகாரி லசந்தவின் தலைமையில் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வை, புளத்கொஹூபிட்டிய பிரதேச செயலகத்தின் தேசிய ஒன்றிணைவு பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

# மின்சார கட்டணம் கழுத்தை நெரிக்கின்றது

நிலமேகம் பிரசாந்த்



நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணம் மக்களின் கழுத்தை நெருக்குவதாக மலையக மக்கள் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது விலைவாசி மலைபோல உயர்ந்துவிட்டது. செலவுக்கேற்ற வருமானம் இன்மையால் மக்கள் நாளாந்தம் தங்கள் உணவு பழக்க வழக்கத்தை மாற்றி உணவு முறையை கட்டுப்படுத்தி விட்டனர். குறிப்பாக மலையக மக்கள் சொல்லொணா துயரத்தை அனுபவித்து வருகின்றனர்.

ஒரு நாள் நிம்மதியாக சாப்பிட்டு உறங்கிய காலத்தை மறந்தவர்களாகி விட்டனர். அதேபோல பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் இடைவிலகலும் அதிகரித்து விட்டது. இந்நிலையில் மின்சார கட்டணம் அதிகரித்துள்ளமை மேலும் மலையக மக்களின் சுமையை அதிகரித்துள்ளது. மீண்டும் குப்பி லாம்பு பயன்படுத்தும் நிலைக்கு சென்று விட்டனர் என்றார்.

### தொழிலாளர் தேசிய சங்கத்தின்

# தோட்டக் கமிட்டி கூட்டம் லிந்துலையில்

எஸ். சதீஸ்

தொழிலாளர் தேசிய சங்கத்தின் லிந்துலை பிரதேச தோட்டக் கமிட்டி உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் நேற்று (27) லிந்துலையில் நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவர் வேலு சிவானந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய பழனி திகாம்பரம், எம். உதயகுமார் எம்.பி, தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளர் சோ. ஸ்ரீதரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் உபதலைவர் சிவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அத்துடன், தொழிலாளர் தேசிய



சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நகுலேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர் சுதாகரன், பிரதேச சபை வேட்பாளர்களான சேகர், ரமேஷ், ராஜதுரை, கோகிலா பிரதேச இணைப்பாளர் கார்த்திக், பெரேரா இணைப்பாளர் ரவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மீனாட்சி தோட்ட பெரிய காண்டியம்மன் கோவிலின்

# பாரம்பரிய பூஜையும் பொன்னர் சங்கர் கூத்தும்

இரா.யோகேசன்



வட்டவளை, மீனாட்சி தோட்ட பெரிய காண்டியம்மன் கோவிலின் பாரம்பரிய பொன்னர் சங்கர் கூத்துடன் தொடர்புடைய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

இதன்படி முதல் நாளன்று இரவு மகாமுனிக்கு பலி பூசை இடம்பெற்றதுடன் மறுநாள், பொன்னர் சங்கர் தொடர்புடைய கதை அபிநயம் செய்யப்பட்டதோடு அதற்குரிய பூஜைகளும் நடைபெற்றன.

குறிப்பாக இச்சடங்கு நம்பிக்கையை அடிப்படையாகவே வருடாவருடம் நடைபெறுவதுடன், குறிப்பாக குழந்தை இல்லாதவர்கள் இக்கோவிலுக்கு வந்து குழந்தை வரம்வேண்டுதலை மேற்கொள்வது சிறப்பான அம்சமாகும்.

அடுத்ததாக இக்கோவிலுக்கு அருகில் ஊற்றெடுக்கும் நீர் எக்காலத்திலும் வற்றாது இருப்பதும் ஓர் அபூர்வமாக இப்பிரதேச மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

மேலும் இக்கோவிலை மருதை என்பவரே உருவாக்கினார். இதனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இச்சடங்குகளிலும் பிரதான பூஜைகளிலும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் வட்டவளை மீனாட்சி தோட்ட ஜெயராம் தலைமையில் தோட்ட இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டதோடு தோட்ட மக்கள் பெரிய காண்டியம்மனை வழிபட்டு ஆசிகளையும் பெற்றுச்சென்றனர்.





# சர்வமத செயற்குழு செயலமர்வு...

பதுளை மாவட்ட சர்வமத செயற்குழு செயலமர்வு, பதுளை ‘கிராண்ட் ரிஜன்சி’ விடுதியில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது. (எம். செல்வராஜ்)

# ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தில் மடிந்த முதல் குரல்

பாராளுமன்றத்தில் பெப்ரவரி 22ஆம் திகதியன்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை; நடத்த ஒரு தேர்தல் இல்லை” எனப் பகிரங்கமாக அறிவித்ததன் பின்னர், வாக்குரிமையை வென்றெடுப்பதற்கானதும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குமான போராட்டம் சூடுபிடிக்கத்தொடங்கியுள்ளது.

அன்றையதினமே சபைக்கு நடுவே இறங்கிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர், “தேர்தலை நடத்து” எனக் கோஷமெழுப்பினர்.

மறுநாள், நாட்டின் பல பாகங்களிலும் “தேர்தலை நடத்து” என்ற கோஷத்துடன் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை விடுவிக்க அரசாங்கம் பின்வாங்குகின்றது என்ற விமர்சனமே முன்வைக்கப்படுகின்றது.

இந்தத் தேர்தல் களத்தை பொறுத்தவரையில், அரசாங்கத்துக்கான செல்வாக்கு மக்கள் மத்தியில் குறைந்துவிட்டது. எதிர்க்கட்சிகளுக்கு அதிலும் திசைகாட்டியை சின்னமாகக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு மேலோங்கி இருந்ததாகக் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிக்கொள்வதன் ஊடாக, ஜனாதிபதியை மாற்றமுடியாது. அரசாங்கத்தை கைப்பற்றமுடியாது என்பது உண்மையாகும். எனினும், அடுத்தடுத்த தேர்தல்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் இடப்படும் ஆரம்பப் புள்ளியே உள்ளூராட்சி சபை தேர்தலாகும்.

எனினும், ஏதாவது சாக்குபோக்குகளைக் கூறிக்கொண்டு தேர்தலை பிற்போடும் செயலிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படுகின்றது. பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதிலேயே ஜனாதிபதி குறியாக இருக்கின்றார்.

ஆனால், நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்ட மக்களுக்கு வாக்களிக்கும் உரிமைக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இன்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னரே நடத்தியிருக்கவேண்டும். எனினும், ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இனியும் காலந்தாழ்த்த முடியாது; அதற்கு இடமளியோம்”, “தேர்தலை உரிய திகதியில் நடத்து” என்ற கோஷங்களுடன் தேசிய மக்கள் சக்தி, கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (26) அன்று பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

மருதானை அல்லது கோட்டையிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகம் வரையிலும் பேரணியாக செல்வதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், முக்கிய கேந்திர ஸ்தானங்களுக்குள் பேரணி பிரவேசிப்பதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும், நகர மண்டபத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு ஒருசில நிமிடங்களுக்குள் அப்பேரணியின் மீது நீர்த்தாரை, கண்ணீர்ப்புகை பிரயோகங்கள் நடத்தப்பட்டன. அதில் காயமடைந்த தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் நிமல் அமரசிறி மரணமடைந்தார்.

ஜனநாயகத்துக்கான முதலாவது குரல் நசுக்கப்பட்டுவிட்டது. மக்களின் குரலை இரும்பு கரங்களைக் கொண்டு ஒடுக்க நினைத்தால் அது என்றோ ஒருநாள் அரசாங்கத்துக்கு எதிராக திரும்பும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

ஒரு சிலருக்கு வாழ்க்கையில் சில பிரச்சினைகள், துன்பங்கள் வந்துற்றால், சுற்றியிருக்கும் உறவினர்கள், நண்பர்கள் “உங்களுக்கு காலம் சரியில்லை; எனவே எதுவும் செய்யாமல் இருங்கள்; காலம் மாறிவிட்டதும் பழைய நிலைக்கு வரமுடியும்” என்பார்கள்.

அவர்கள் அப்படிச் சொல்லுவதைக் கேட்டு, சிலர் சும்மா இருந்து விடுவார்கள். துணிச்சலின்றி தங்கள் கடமைகளையும் நிறுத்திவிடுவார்கள்.

எவ்விதமான துன்பங்கள் சூழ்ந்தாலும் வேலைகளை ஒத்திவைக்கக்கூடாது. ஆனால், பிரச்சினைகளுக்கு உள்ளே புகுந்து கொள்ளவும் கூடாது. காரியங்களில் அவதானம் தேவை. எதிரிகள் மறைத்தே காரியங்களைச் செய்கின்றனர்.

பய உணர்வுடன், எமது அன்றாட காரியங்களை செய்யாமல், விருப்பமின்றி ஒதுங்கிக் கிடப்பதும், செயல்களை ஒத்திவைப்பதும் அதைப் படிப்படியாக நிறுத்தி வைப்பதும் கூடாது. எத்தனையோ கோடி நொடிப்பொழுதுகள் மனித முன்னேற்றங்களுக்கானவை. நிகழ்வுகள் நடந்தபடியே இருக்கும். இவை உங்களுக்குத் தெரியாதா?

எல்லாமே நடக்கும்! என்றும் உங்கள் பணிகள் தொடர்ந்தபடியே இருக்கட்டும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியில் தேங்கிய வெள்ளத்தால் சிரமம்



வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக வாகன சாரதிகள், பாதசாரிகள் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட யாட் வீதியில் தேங்கி நிற்கின்ற வெள்ளம் காரணமாக, பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். கல்முனையில் இந்த வீதியிலேயே முக்கிய அரச நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச - தனியார் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் என பெரும்பாலானவர்கள் இந்த வீதியையே அன்றாடம் தமது போக்குவரத்து பாதையாக பாவித்து வருகின்றனர்.இவ்வாறு வெள்ளம் தொடர்ச்சியாக தேங்கி வடிந்தோடாமல் காணப்படுவதால், காகங்கள் குளிக்கின்ற இடமாக இப்பாதை மாறி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இது தவிர, தேங்கியுள்ள வெள்ளத்துக்கு ஊடாகப் பயணம் செய்கின்ற வாகனங்கள், திடீரென பழுதடைந்து, தரித்து நிற்பதையும் காண முடிகின்றது.

மேலும், இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– பாறுக் ஷிஹான்

தேர்தல் ஒத்திவைப்பு:

# உத்தியோகபூர்வமான ‘பேய்க்காட்டல்’

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், திட்டமிட்டபடி நடைபெறாமல் போயுள்ளது. ‘திட்டமிட்டபடி’ தேர்தல் மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறும் என கடைசி வரை சொல்லிக் கொண்டு வந்தவர்கள், இப்போது ‘தமது திட்டப்படி’ தேர்தலை ஒத்திவைத்துள்ளார்கள்.

இன்றைய நிலையில், தேர்தல் நடைபெறாமல் ஒத்திவைக்கப்படுவதில் உள்ள நியாயங்களையும் பின்னணிக் காரணங்களையும் மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், அது நடந்து கொண்டிருக்கின்ற விதம்தான் கவனிப்புக்கு உரியது.

அதாவது, வாக்கெடுப்பு சில மாதங்களுக்கு தள்ளிப்போவதை விட, எல்லாம் நடக்கப் போகின்றது என்பதைப் போன்ற தோற்றப்பாட்டை கட்டமைத்து, கடைசித் தருணத்தில் எல்லாவற்றையும் பூச்சியத்தால் பெருக்கியதுதான் விமர்சனத்துக்கு உரியதாகியுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் நிதிசார் நெருக்கடி, ஒவ்வொரு குடும்பத்திலும் பாரிய எதிர்விளைவை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் கடுமையான வாழ்வியல், மனநெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்; இது இரகசியமானதுமல்ல.

வறிய மக்கள் மட்டுமன்றி, கூலித் தொழிலாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட மாதச் சம்பளத்தை பெறுகின்ற உத்தியோகத்தர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகாரக் கதிரையில் அகலக் கால்போட்டு உட்கார்ந்து இருப்பவர்களுக்கும் பண முதலைகளுக்கும் இது புரியாமல் போகலாம்.

தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் என்ற எண்ணம் பொதுவாக மக்களுக்கு இருந்தாலும், இன்றைய சூழ்நிலையில் அதனை எதிர்கொள்வதற்கு மக்கள் மனநிலை ரீதியாகத் தயாராக இல்லை என்பதே யதார்த்தமாகும்.

மறுபுறத்தில், மருந்துக் கொள்வனவுக்கும், உணவுப் பொருட்களையும் அத்தியாவசிய உற்பத்திகளையும் இறக்குமதி செய்வதற்கும் கஜானாவில் பணமில்லாத நாட்டில், தேர்தல் நடத்துவதற்கும், அதன் பின்னர் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கும் நிதி கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதை சாதாரண மக்களே அறிவார்கள்.

தெரு முனைகளிலும், தேநீர்க்கடைகளிலும் அடுப்பங்கரையிலும் அரசியல் பேசுகின்ற மக்களுக்கே, இப்போது தேர்தலை நடத்துவது நடைமுறைச் சாத்தியமில்லை; அல்லது, மிகக் கடினமானது என்பது, பல மாதங்களுக்கு முன்னரே பட்டவர்த்தனமாகத் தெரிந்திருந்தது.

இப்படியிருக்க, நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள், ஆட்சியாளர்கள், உயர்அதிகாரிகளுக்கு இது ஏன் ஆரம்பத்திலேயே தெரியாமல் போனது என்பதுதான், ஆச்சரியம் நிறைந்த கேள்வியாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் ஒன்பதாம் திகதி திட்டமிட்டபடி இடம்பெறும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதுடன் தபால்மூல வாக்களிப்புக்கும் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், அதற்கான நிதி ஏற்பாடுகள் இருப்பதாகவே ஆரம்பத்தில் இருந்து அதிகாரிகளும் அரசாங்கமும் அடித்துக் கூறி வந்தமை, இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இப்போது, நீதிமன்ற விசாரணைகள் முற்றாக முடிவுக்கு வராத நிலையில், நிதிப் பற்றாக்குறையை காரணம் காட்டி, தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, நீதிமன்றுக்கு வாக்குறுதி அளித்ததன்படி, மார்ச் 19 இற்கு முன்னர் தேர்தல் நடைபெற வேண்டும். என்றாலும், மார்ச் மூன்றாம் திகதியில் அறிவிக்கப்படவுள்ள புதிய தேர்தல் திகதியானது, ஒரு சில மாதங்களுக்கு பிறகான ஒரு நாளாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

“இதோ தேர்தல் நடைபெறப் போகின்றது” என்று உத்தியோகபூர்வமாக அறிவித்து, மக்களை அந்த மனநிலைக்குள் வலிந்து தள்ளி, தேர்தல் களத்தை உசுப்பேற்றி விட்டு, கடைசியில் வடிவேலு பாணியில் “எல்லோரும் ஆட்டத்தை கலைத்து, வீட்டுக்கு போங்கள்” என்று கூறுவது போல் உள்ளது.

ஆகவே, சாதாரண மக்களே முன்னுணர்ந்திருந்த களநிலைமையை, அரசாங்கமும் அதிகாரிகளும் ஏற்கெனவே அறிந்திருக்கவில்லையா? அல்லது, அரசாங்கத்தின் திட்டத்துக்குள் அதிகாரிகளின் திட்டம் மாட்டிக் கொண்டதா என்று தெரியவில்லை.

எது எப்படியாயினும், மக்களது பார்வையில் சட்டப்படி, உத்தியோகபூர்வமான முறையில் அவர்கள் பேய்க்காட்டப்பட்டு உள்ளார்கள். ‘சட்டப்படி’ என்பது பேச்சு வழக்கில் இன்னுமோர் அர்த்தத்திலும் பயன்படுத்தப்படுவதுண்டு.

மக்களுடைய பொழுதுகள் மட்டுமன்றி, தேர்தலுடன் தொடர்புடைய அதிகாரிகளின் நேரமும் குறிப்பிட்டளவான பணமும் வீணடிக்கப்பட்டுள்ளன. இது ஒரு வகையான ‘அரசியல் நாடகம்’ என்றுதான் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

“நாங்கள் பிரதமரை மாற்ற நினைத்தோம்; ஆனால், யாரும் பொறுப்பேற்கவில்லை”.

“ஜனாதிபதி பதவியை விட்டுக் கொடுக்க தயாராக இருந்தோம்; ஆனால், யாரும் முன்வரவில்லை”.

“இனப்பிரச்சினையை தீர்க்க முனைந்தோம்; ஆனால், அதற்குத் தடைகள் வந்து விட்டன. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் எண்ணம் எமக்கிருந்தாலும் இவர்கள் விடுகின்றார்கள் இல்லை”.

“பொருட்களின் விலைகளை அதிகரிப்பதில் எமக்கு உடன்பாடில்லை; ஆனால், நாட்டு நிலைமையில் மின்சாரக் கட்டணத்தை, பொருட்களின் விலையை அதிகரிக்காமல் வேறு எதையும் செய்ய முடியாது”

இவை போன்ற ஏகப்பட்ட நியாயப்படுத்தல்களின் அடிப்படையிலேயே, தேர்தல் ஒத்திவைப்பையும் நோக்க வேண்டியிருக்கின்றது. அதாவது, கிட்டத்தட்ட இதே பாணியில்தான், உள்ளூராட்சி தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி மார்ச் ஒன்பதாம் திகதி நடத்த நாம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம். வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தோம்; திகதி அறிவிக்கப்பட்டது. ஆனால், என்ன செய்வது, இப்போது நிதியை விடுவிக்க முடியாத பற்றாக்குறை நிலை காணப்படுகின்றது” என்று அரசாங்கமும் அதிகார தரப்பினரும் சொல்லாமல் சொல்வதாகவே எடுத்துக் கொள்ளலாம்.

2022 மார்ச் மாதம் தொடங்கிய மக்கள் எழுச்சியின் முடிவில், மக்கள் எதிர்பார்த்த ஒன்றும் எதிர்பாராத இன்னொன்றும் நிகழ்ந்துள்ளன எனலாம். அதாவது, கோட்டபாய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடினார்; ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

இந்தப் பிரளயத்துக்குப் பிறகு, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார் என்று சொல்வதை விட, அதலபாதாளத்தில் கிடந்த நாட்டை அவர் பொறுப்பேற்றார் என்று கூறுவதே மிகப் பொருத்தமானது.

அதற்கமைய, அவர் நாட்டை கொஞ்சமாவது தூக்கி நிறுத்தி இருக்கின்றார் என்பதையும், இது வேறு யாராலும் முடியாத காரியமாக இருந்திருக்கும் என்பதையும் இங்கு பதிவு செய்ய வேண்டியிருக்கின்றது.

நாட்டில் மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் முடிவடைந்து, பல வருடங்கள் சென்று விட்டன. அதேபோன்று, உள்ளூராட்சி சபைகளுக்கும் காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்விரு தேர்தல்களையும் நடத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதற்கிடையில், பொதுவாக தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவதற்கு தயங்கும் ஓர் ஆட்சியாளர் என்ற பார்வையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடந்த காலங்களில் இருந்தது.

ஆனால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கத்துக்கு பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. மாகாண சபை தேர்தலை நடத்தினால் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துவதா? அதில், இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பன இவற்றுள் முக்கியமானவையாகும். எனவேதான் அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலுக்கு சென்றது எனலாம்.

தேர்தலை நடத்துவதன் ஊடாக மட்டும் ஜனநாயகம் வந்து விடுமா என்ற கேள்விகள் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளும் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு கொடுத்திருக்கலாம் எனத் தெரிகின்றது.

எனவே, இந்த நிர்ப்பந்தத்தின், அடிப்படையிலேயே அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்குச் சென்றதே தவிர, மனவிருப்பத்துடன் தேர்தல் நடத்துவதற்கான உள்ளார்ந்த முனைப்பை கொண்டிருக்கவில்லை. இவ்வாறு சொல்வதற்கு பல அவதானிப்புக்கள் உள்ளன.

உண்மையில், மார்ச் ஒன்பதாம் திகதி தேர்தலை நடத்துவதற்கான உறுதியான நோக்கம், அரசாங்கத்துக்கு இருந்திருக்கும் என்றால், ஆரம்பத்தில் இருந்தே, எப்படியாவது தேர்தலை நடத்துவதற்கான தோரணையில்தான் ஆளும்தரப்பின் அறிக்கைகளும், அரச ஆதரவு அதிகாரிகளின் செயற்பாடுகளும் இருந்திருக்க வேண்டும்.

இவ்வாறிருக்க, ஜனாதிபதியின் “இல்லாத தேர்தலை எவ்வாறு பிற்போடுவது” என்ற தொனியிலான உரையும் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் இருந்துள்ளது என்பதை குறிப்புணர்த்தி உள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

உண்மையில், நாட்டு நடப்புகளை தொடராக அவதானித்த மக்கள், மார்ச் ஒன்பதாம் திகதி தேர்தல் நடைபெறுவதற்கான நிகழ்தகவு குறைவு என்பதை எப்போதோ கணித்து விட்டார்கள். தேர்தல் ஆணைக்குழு, இப்போது அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கப்பால் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

ஆனால், தேர்தலை நடத்த வேண்டிய வெளி-அழுத்தம், அரசாங்கத்துக்கு ஏற்பட்டது என்பதற்காக, அல்லது தேர்தலுக்கு நாங்கள் தயார் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டிருந்த வாக்காளப் பெருமக்களை, வலுக்கட்டாயமாக தேர்தல் களத்துக்குள் தள்ளிவிட்டு, மக்கள் தொடக்கம் அதிகாரிகள் வரையில் அனைவரது நேரத்தையும் வீணாக்கியதற்கு என்ன பெயர் வைப்பது என்றுதான் தெரியவில்லை.

# வெளியே வர முடியாமல் ரித்திகாவின் தவிப்பு



இயக்குநர் ஹர்ஷ் வர்தன் இயக்கத்தில், நடிகை ரித்திகா சிங் முதன்மை கதாப்பாத்திரத்தில் நடித்துள்ள திரைப்படம் “இன் கார்”. கடத்தப்பட்டு வன்புணர்வுக்குள்ளாகும் பெண்ணின் வலியை, அவளது பார்வையில் அந்த கடத்தல் சம்பவத்தின் வழியாகவே சொல்லும் படமாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படத்தை இன்பாக்ஸ் பிக்சர்ஸ் சார்பில் அஞ்சும் குரேஷி, சாஜித் குரேஷி தயாரித்துள்ளனர்.

மார்ச் 3 வெளியாகவுள்ள இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பில் நடிகை ரித்திகா சிங் பேசியதாவது,

“இன் கார்” படம் எனக்கு மிகப்பெரும் சவாலானதாக இருந்தது. ஒரு கடத்தலுக்கு உள்ளாகும் பெண் எத்தனை மனச்சிதைவுக்கு உள்ளாகிறாள், அவள் துன்பத்தின் எந்த எல்லை வரை செல்லுகிறாள், என்பதை நுணுக்கமாக இந்தப்படம் சொல்லும். இந்தப்படத்தில் நடித்த பிறகும் என்னால் அந்த கதாபாத்திரத்தில் இருந்து மீண்டுவர முடியவில்லை. எனக்குள் பெரும் பாதிப்பை “இன் கார்” படம் ஏற்படுத்தியது” என்றார்.

# தேநீர்க் கடையில் ஜேர்மனி ஜனாதிபதி

புதுடெல்லி

இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜேர்மனி ஜனாதிபதி ஓலாப் ஸ்கால் இந்தியாவில் இரண்டு நாட்கள் சுற்று பயணம் மேற்கொண்டுள்ளார்.

இப்பயணத்தில் அவருடன் ஜேர்மனியின் உயர்மட்ட வர்த்தக குழுவினரும் வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு ராஜ்யபத் பவனில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பிரதமர் மோடியைச் சந்தித்து பேசிய அவர்கள் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நிலையில் புதுடெல்லியில் ஓலாப் ஸ்கால் வீதியோர கடையில் நின்று தேநீர் அருந்துவது போன்ற புகைப்படங்களை ஜேர்மனி தூதரகம் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# களவாடப்பட்ட அழகியல் மம்மூட்டி படம் மீது புகார்



மலையாளத்தில் மம்முட்டி நடித்த ‘நண்பகல் நேரத்து மயக்கம்’ திரைப்படம் திரையரங்குகளைத் தொடர்ந்து ஓ.டி.டி. தளத்திலும் வெளியாகி உள்ளது. இந்த படத்துக்கு தனது ‘ஏலே’ பட காட்சிகளை திருடி இருப்பதாக இயக்குனர் ஹலிதா ஷமீம் குற்றம் சாட்டி உள்ளார்.

இவர் தமிழில் சில்லுக்கருப்பட்டி, பூவரசம் பீப்பி ஆகிய படங்களையும் இயக்கியுள்ளார். ஏலே படத்தில் சமுத்திரக்கனி நடித்து இருந்தார். ஹலிதா ஷமீம் முகநூலில் வெளியிட்டுள்ள பதிவில், “ஏலே படத்திற்காக முதன் முதலில் ஒரு கிராமத்து மக்களை படப்பிடிப்பிற்கு தயார் செய்து அதில் அவர்களையும் நடிக்க வைத்தோம். அதே கிராமத்தில் நண்பகல் நேரத்து மயக்கம் படமாக்கப்பட்டது மகிழ்ச்சியே. இருப்பினும் நான் பார்த்து, பார்த்து சேர்த்த அழகியல் யாவும் இப்படம் முழுக்க களவாடப்பட்டு உள்ளது.

ஐஸ்காரர் என்றால் இங்கே பால்காரர். செம்புலி இங்கே செவலை. அங்கே அமரர் ஊர்தி பின்னே செம்புலி ஓடியது போல், இங்கே மினி பஸ் பின்னே செவலை ஓடுகிறது. ஏலே படத்தில் நடித்த கலைக்குழு பாடகர் பாத்திரம் போலவே, நண்பகல் நேரத்து மயக்கம் படத்தில் மம்முட்டியுடன் பாடிக் கொண்டிருக்கிறார்.

இரண்டு படங்களையும் ஒப்பிட்டு சொல்வதற்கு இன்னும் நிறைய உள்ளன. நான் தேர்வு செய்த அழகியல் இரக்கமின்றி திருடப்படும்போது அமைதியாக இருக்கமாட்டேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ராஷி கண்ணா காட்டம்

நடிகை அலியாபட் வீட்டு அறையில் இருந்ததை எதிர்வீட்டு மாடியில் நின்று இருவர் ரகசியமாக படம்பிடித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழில் அடங்க மறு, இமைக்கா நொடிகள், சங்கத்தமிழன், துக்ளக் தர்பார், அரண்மனை-3 உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள நடிகை ராஷி கண்ணா இதுகுறித்து கூறும்போது, “ஒவ்வொரு மனிதருக்கும் சொந்த வாழ்க்கை உள்ளது. சில விஷயங்களை பகிரங்கப்படுத்த விரும்பமாட்டார்கள். பிரபலங்களை பார்க்கும்போது அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

ஆலியாபட் போன்ற நடிகைகளை பார்த்தால் நிச்சயம் படங்கள் எடுத்துக்கொள்ள தோன்றும். அதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லை மீறி நடந்து கொள்ளக்கூடாது என்றார்.



# வாழ்த்து மழையில் சமந்தா



தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் சமந்தா சில தினங்களுக்கு முன்பு மயோசிடிஸ் என்ற தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவித்து இருந்தார்.

சிகிச்சை பெற்று வந்ததால் சில மாதங்கள் சினிமாவை விட்டு ஒதுங்கி இருந்த சமந்தா தற்போது மீண்டும் நடிக்க தொடங்கியுள்ளார். சமந்தா நடிப்பில் சரித்திர கதையம்சம் கொண்ட படமாக உருவாகியுள்ள சாகுந்தலம் திரைப்படம் 5 மொழிகளில் வருகிற ஏப்ரல் 14 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், சமந்தா சினிமாவில் நடிக்கத் தொடங்கி தற்போது 13 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளார். தமிழில் ‘விண்ணைத் தாண்டி வருவாயா’ படத்தில் நந்தினி என்ற கேரக்டரில் நடித்திருந்தார்.

இந்தப் படம் கடந்த 2010 ஆண்டு பெப்ரவரி 26 வெளியானது. இந்நிலையில் சமந்தா தன்னுடைய 13 ஆண்டுகால திரைப்பயணத்தை பூர்த்தி செய்துள்ளார். இதையடுத்து அவரது ரசிகர்கள் சமந்தாவுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக நடிகை சமந்தா தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இந்த அன்பை நான் உணர்கிறேன்... இதுதான் என்னை தொடர வைக்கிறது... இப்போதும் என்றும், நான் என்னவாக இருக்கிறேன் என்பது உங்களால் தான். 13 ஆண்டுகள், நாம் இப்போதுதான் தொடங்குகிறோம்” என்று பதிவிட்டுள்ளார்.


# மீண்டும் விஜய்-த்ரிஷா



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் லியோ படத்தில் த்ரிஷா முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

14 வருடங்களுக்கு பிறகு மீண்டும் இருவரும் இணைந்து நடிப்பதால் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பார்ப்பு நிலவி உள்ளது.

இப்படத்தின் படப்பிடிப்பு காஷ்மீரில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த படப்பிடிப்புகாக படக்குழு அனைவரும் தனி விமானத்தில் காஷ்மீருக்கு சென்றுள்ளனர்.



# ஆழ்துளைக் கிணற்றில் மீண்டும் ஒரு குழந்தையின் கதறல்

மத்திய பிரதேசம்

மத்திய பிரதேசத்தின், பாலி கிராமத்தைச் சேர்ந்த ரினா என்ற 3 வயதான பெண் குழந்தையொன்று நேற்று முன்தினம்(26) தனது வீட்டுக்கு அருகே மூடப்படாமல் இருந்த ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்துள்ளது.

இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அக்குழந்தையின் குடும்பத்தினர் இதுகுறித்து உடனடியாக மீட்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த மீட்புக்குழுவினர் ,குழந்தையை மீட்கும் பணியைத் தொடங்கினர்.

இதன்போது சுமார் 30 அடி ஆழத்தில் அக்குழந்தை சிக்கியிருப்பது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அருகில் குழித்தோண்டி குழந்தையைப் பத்திரமாக மீட்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நண்பனின் பிறப்புறுப்பைத் துண்டித்த நண்பன்

தெலுங்கானா

## இதயத்தை வெளியே எடுத்தான்



இளைஞர் ஒருவர் தனது உயிர் நண்பனின் தலை மற்றும் அந்தரங்க உறுப்பைத் துண்டித்து, உடலில் இருந்து இதயத்தை வெளியே எடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம், நலகொண்டா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உயிர் நண்பர்களான நவீன் மற்றும் ஹரிஹர கிருஷ்ணா.

தனியார் கல்லூரியொன்றில் கல்விகற்று வந்த இவர்கள், அதே கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவியைக் காதலித்து வந்துள்ளனர்.

முதலில் நவீன் தனது காதலை அம்மாணவியிடம் வெளிப்படுத்தியுள்ளார். இதற்கு அம்மாணவியும் அவரது காதலை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து இருவரும் காதலித்து வந்துள்ள நிலையில் கடந்த 2 ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்துள்ளனர்.

இதன் பின்னர் வெகுநாட்கள் கழித்து கிருஷ்ணா குறித்த மாணவியிடம் தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

நவீனின் காதலை விட்டு பிரிந்து பல மாதங்கள் ஆனதையடுத்து, கிருஷ்ணாவின் காதலுக்கு அம்மாணவி சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இருவரும் காதலித்து வந்துள்ள நிலையில், தனது முன்னால் காதலியை மறக்க முடியாமல் தவித்த நவீன், அம்மாணவிக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துவதும், குறுஞ்செய்தி அனுப்புவதும் எனத் தொடர்ந்தும் தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து அம்மாணவி தனது காதலனான கிருஷ்ணாவிடம் தெரிவிக்கவே ஆத்திரமடைந்த அவர், நவீனைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்துள்ளார்.

இதற்காக கடந்த 3 மாதங்கள் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், கடந்த 17ஆம் திகதி நவீனைத் தனியாக ஆள்நடமாட்டமற்ற பகுதியொன்றுக்கு அழைத்துச் சென்ற கிருஷ்ணா, அவருக்கு மது அருந்தக் கொடுத்து பின்னர் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

குறிப்பாக ‘நவீனின் தலை, கை விரல்கள் மற்றும் பிறப்புறுப்பைத் துண்டித்துள்ளதோடு உடலையும் இரண்டாக வெட்டி இதயத்தை வெளியே எடுத்துள்ளார்.

பின்னர் இது குறித்த புகைப்படத்தை தனது காதலிக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இக்கொலை நடந்து 9 நாட்கள் ஆன நிலையில் கிருஷ்ணா நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இதையடுத்து, கிருஷ்ணனைக் கைது செய்த பொலிஸார் அவரைச் சிறையில் அடைத்துள்ளனர்.



# அலுமினியத்தில் 100 ‘வந்தே பாரத் ரயில்கள்

சோனிபட்

முதன்முறையாக அலுமினியத்தால் உருவாக்கப்படும் 100 புதிய தலைமுறை வந்தே பாரத் ரயில்களை, ‘மேக் இன் இந்தியா‘ திட்டத்தின் கீழ் தயாரிக்க இந்திய புகையிரதத் திணைக்களம் முடிவெடுத்துள்ளது.

சுமார் 30,000 கோடி ரூபாய் மதிப்பில் ரயில்பெட்டி தயாரிப்பு மற்றும் 35 வருட பராமரிப்பு திட்டத்திற்கு, பிரான்சின் ‘Alstom‘, மற்றும் ஹைதரபாத்தைச் சேர்ந்த ‘Medha Servo Drives‘ நிறுவனங்கள் ஒப்பந்தம் கோரியுள்ளன.

சோனிபட்டில் தயாராகும் குறித்த ரயில்கள், எடைகுறைவாகவும், அதிக ஆற்றல் திறன் உடையதாகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திடீரென காணாமற் போன லடாக்


லடாக்

லடாக்கில் அண்மைக்காலமாகக் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகின்றது.

இந்நிலையில் அதிகப்படியான பனிப்பொழிவு காரணமாக லடாக் பனியால் மூடப்பட்டுள்ளதாகவும், இதனால் அங்கு வீதிகளைச் சீரமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழகத்தில் உபவேந்தரை தீயிட்டு எரித்த மாணவன்

மத்திய பிரதேசம்



பல்கலைக்கழக வளாகத்துக்குள் வைத்து உபவேந்தரைப் பெட்ரோல் ஊற்றி எரித்துள்ளான் எனக் கூறப்படுகின்றது.

மத்திய பிரதேச மாநிலத்தில், தனியார் பல்கலைக்கழகமொன்றின் உபவேந்தர் மாணவனால் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தூரில் இயங்கிவரும் மருத்துவப் பல்கலைக்கழமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பழைய மாணவனொருவன் தனது சான்றிதழைத் தருமாறு நிர்வாகத்திடம் கேட்டுள்ளதாகவும், எனினும் குறித்த நிர்வாகம் சான்றிதழைத் தர மறுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஆத்திரமடைந்த மாணவன் அப்




பெண்களின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவை வென்று சம்பியனான அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் பெண்களின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா சம்பியனானது.

கேப் டௌணில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான இறுதிப் போட்டியில் வென்றே ஆறாவது முறையாக அவுஸ்திரேலியா சம்பியனானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 156/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பெத் மூனி ஆ.இ 74 (53), அஷ்லெய் கார்ட்னர் 29 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷப்னிம் இஸ்மைல் 2/26 [4], மரிஸனே கப் 2/35 [4], சோல் டைரோன் 1/15 [2], நொன்குலுலெகோ எம்லபா 1/24 [3], அயபொங்கா ககா 0/27 [4])

தென்னாபிரிக்கா: 137/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: லோரா வொல்வராட் 61 (48), சோல் டைரோன் 25 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஷ்லெய் கார்ட்னர் 1/20 [4], மேகன் ஸ்கட் 1/23 [4], டார்சி பிறோண் 1/25 [4], ஜெஸ் ஜொனாசென் 1/21 [3], எலைஸ் பெரி 0/5 [1])

போட்டியின் நாயகி: பெத் மூனி

தொடரின் நாயகி: அஷ்லெய் கார்ட்னர்




மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய அதிபர் ஞாபகார்த்த

## கிரிக்கெட் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு

எச்.எம்.எம். பர்ஸான்

மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ள அதிபர் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

1995 - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த.சாதாரண தரம் கற்ற மாணவ அணிகளைக் கொண்டு இத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அணி வீரர்களை மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்துக்கு முன்பாக இருந்து பான்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு கோலாட்டத்துடன் ஊர்வலமாக மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயம் வரை அழைத்துச் செல்லப்பட்டனார்.



ஸ்பானிய லா லிகா தொடர்:

## அல்மெய்ராவிடம் தோற்ற பார்சிலோனா

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், அல்மெய்ராவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 59 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. 52 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட்டும், 43 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் றியல் சொஸைடட்டும், 42 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும் காணப்படுகின்றன.

வெள்ளிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில்

## புத்தளம் தில்லையடி நியூ பிரண்ட்ஸ் சம்பியன்

எம்.யூ.எம். சனூன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (எப்.ஏ) கிண்ணத் தொடரில் பங்கேற்க தகுதியான அணிகளை தெரிவு செய்வதற்காக புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்படும் தங்க, வெள்ளிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் வெள்ளிக் கிண்ணத் தொடரில் தில்லையடி நியூ பிரண்ட்ஸ் அணி சம்பியனானது.

புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற யாழ். முஸ்லிம் யுனைட்டெட் அணியுடனான இறுதிப் போட்டியில் வென்றே நியூ பிரண்ட்ஸ் சம்பியனானது. இப்போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்த நிலையில், பெனால்டியில் 4-3 என்ற ரீதியில் வென்றே நியூ பிரண்ட்ஸ் சம்பியனானது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## செல்சியை வீழ்த்திய டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செல்சியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.

டொட்டென்ஹாம் சார்பாக, ஒலிவர் ஸ்கிப், ஹறி கேன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 57 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் காணப்படுகின்றது. 55 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றியும் மூன்றாமிடத்தில் 49 புள்ளிகளுடன் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 45 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் டொட்டென்ஹாமும் காணப்படுகின்றன.

Italy

# அகதிகள் படகு கவிழ்ந்ததில் 59 பேர் உயிரிழப்பு



வறுமை மற்றும் உள்நாட்டு போர் உள்ளிட்ட காரணங்களால் ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இத்தாலி உள்ளிட்ட நாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

அந்தவகையில் அண்மையில் 100-க்கும் மேற்பட்ட ஆபிரிக்க அகதிகளுடன் பயணித்த படகொன்று இத்தாலியின் கலாபிரியா கடற்பகுதியில் சென்றபோது திடீரென கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது.

இதில் 59க்கும் மேற்பட்ட அகதிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் மாயமாகி உள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணியில் இத்தாலியின் கடலோர காவல் படையினர், தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா



## காதலர்களுக்கு கொண்டாட்டம்

சீனாவைச் சேர்ந்த 'ஜியான் ஜாங்ளி' என்ற நபர்' Remote kissing device 'என்ற சாதனத்தை வடிவமைத்துள்ளார்.

இச்சாதனத்தின் மூலம் தொலை தூரத்தில் உள்ள காதலர்கள் தங்களது உண்மையான முத்தத்தைப் பரிமாறிக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 'ஜியான் ஜாங்ளி' கருத்துத் தெரிவிக்கையில் "நானும் எனது காதலியும் தொலைதூரத்தில் இருந்தோம். எங்களால் தொலைபேசி மூலமாக மாத்திரமே தொடர்பினை ஏற்படுத்த முடிந்தது. அப்போதுதான் எனக்கு இச் சாதனத்தை வடிவமைக்கும் உத்வேகம் பிறந்தது" என்றார்.

இந்நிலையில் "இச்சாதனத்தைப் பயன்படுத்துவதற்கு இதற்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட் செயலியைத் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்ய வேண்டும் எனவும், பின்னர் அச்சாதனத்தை தொலைபேசியுடன் ப்ளூடூத் மூலமாக இணைத்து, அச்சாதனத்தில் உள்ள சிலிக்கன் உதடுகளில் முத்தமிட்டால் பிரஷர் சென்சார் மூலம் உண்மையான முத்தத்தை தங்களுடைய துணைக்கு வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சாதனத்தின் விலை 288 யுவான் என்பது குறிப்பிடத்தக்கது.



## மருத்துவ உலகில் புதிய சாதனை

உலகம் முழுவதும் உள்ள மக்கள் நாள்தோறும் புதுவித நோய் கிருமிகளால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அத்தகைய கிருமிகளில் இருந்து சிறந்த முறையில் மக்களை பாதுகாக்க புதிய நுண்ணுயிர் எதிர்ப்பியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தாவரத்தில் இருந்து வெளியாகும் நச்சிலிருந்து இப் புதிய நுண்ணுயிர் எதிர்ப்பி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் போலந்து ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நுண்ணுயிர் எதிர்ப்பி ஆனது இதற்கு முன்பாக பயன்படுத்தபட்டு வரும் நுண்ணுயிர் எதிர்ப்புகளைவிடவும் அதிக திறன் கொண்டது என்றும் இதில் பக்க விளைவுகள் எதுவும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆராய்ச்சியாளர்களின் இக்கண்டுபிடிப்பு மருத்துவத் துறையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.

## மலத்தை முகர்ந்து பார்த்தால் இவ்வளவு சம்பளமா?



மனித மலத்தை முகர்ந்து பார்க்கும் வேலைக்கு லண்டனை சேர்ந்த ஃபீல் கம்ப்லீட், என்ற பிரபல சுகாதார நிறுவனமானது ஆள் தேடி வருகிறது .

குடல் ஆரோக்கிய ஆலோசனை சேவை நிறுவனமான இந்நிறுவனம்

இப் பணியில் இணைவோருக்கு 1,500 யூரோ அதாவது இலங்கை மதிப்பில் மாதம் சுமார் 5.78 லட்சம் ரூபாய் சம்பளமாக வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பூம்மெலியர்" எனப் பெயரிடப்பட்டுள்ள இப் பதவிக்கான விண்ணப்பம் தற்போது கோரப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடல் ஆரோக்கியம் மற்றும் மனிதர்கள் தங்கள் உணவு பழக்கத்தில் மேற்கொண்டுள்ள மாற்றத்தால் உடலளவில் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ்



## முத்தமிட முயன்ற நபர் நாக்கைக் கடித்துத் துப்பிய பெண்

பிரான்ஸில் எவிக்நோன் என்ற பகுதியில் 57 வயதான பெண் ஒருவர் தனது நாயை நடை பயிற்சிக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் அப்பெண்ணைக் கட்டி அணைத்து, வலுக்கட்டாயமாக முத்தமிட முயற்சித்துள்ளார்.

இதனால் அப்பெண்மணி அவரிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவரது நாக்கை கடித்து விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

மேலும் இது குறித்து பொலிஸ் நிலையத்திலும் அவர் புகார் அளித்துள்ளார்.

குறித்த புகாரில் "தனது தொடைப் பகுதியில் அந்நபர் கை வைத்தார் எனவும், பின்னர் தன்னை துஷ்பிரயோகம் செய்ய முயன்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் கடித்த நாக்கின் ஒரு பகுதியையும் அவர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் துனிசியாவைச் சேர்ந்த 30 வயதுடைய நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்கா



## 5 பேரின் உயிரைப் பறித்த ஆம்புலன்ஸ் விமானம்

அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான ஆம்புலன்ஸ் விமானம் ஒன்று, அண்மையில் ஸ்டேஜ்கோச் நகரில் இருந்து நோயாளி ஒருவரை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலை நோக்கிப் பயணித்துள்ளது.

குறித்த விமானத்தில் விமானி, வைத்தியர், தாதி, நோயாளி மற்றும் அவரது உறவினர் என மொத்தமாக 5 பேர் இருந்துள்ளனர்.

இந்நிலையில் திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக குறித்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே ஸ்டேஜ்கோச் நகரில் உள்ள மலைப்பாங்கான பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இக் கோர விபத்தில் விமானத்தில் பயணித்த ஐவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியாத நிலையில் அமெரிக்காவின் தேசிய விமான போக்குவரத்து ஆணையம் இது குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 28 பெப்ரவரி 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.